**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண்.84/2017**

நாள்: 12.08.2026.

பெயர்: ராஜுவ் காந்தி (வா.சா.2) த/பெ: ரத்தினசாமி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**6 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...**

1) நான் வாதியின் தம்பி என்றால் சரிதான். நானும், வாதியும் தனித்தனியே திருமணம் செய்துக்கொண்டு தனித்தனியே வசித்து வருகிறோம் என்றால் சரிதான். குடும்ப சொத்துக்கள் தனித்தனியே அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல, எனது அண்ணன் தான் குடும்ப சொத்துக்களை பார்த்து வருகிறார். தாவா சொத்து பாகம் பிரியவில்லை என்றால் சரிதான். எனது சகோதரர் வாதி மற்றும் சகோதரிகளுக்கும் தாவா சொத்தில் பாகம் உள்ளது என்றால் சரிதான். நானோ, எனது சகோதரிகளோ இவ்வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். 6ம் பிரதிவாதியிடம் நான் மனுக் கொடுத்தேனா என்றால் இல்லை, எனது அண்ணன் மனுக் கொடுத்தார், அப்போது நான் உடன் இருந்தேன். எனது அண்ணன் கொடுத்த மனுவைப் பற்றி எனனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

2) இவ்வழக்கில் நான் ஏன் தரப்பினராக இல்லை என்றால் நான் வெளியூரில் வேலைப் பார்த்து வருவதால் எனது அண்ணன் வழக்கை நடத்தி வருகிறார். இவ்வழக்கில் மாவட்ட ஆட்சியர் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். UDR ல் பட்டா மாறியுள்ளதால் மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோர் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதி சட்டப்படி உரிமை உள்ள ஆவணங்களை பதிவு கோருபவர் கொடுக்கும் போது, அதனை பதிவு செய்ய மறுக்க 6ம் பிரதிவாதிக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு எதிராக உத்தரவிட்டால், உத்தரவைப் பொறுத்து 6ம் பிரதிவாதி பத்திரங்கள் பதிய மாட்டார் என்றால் சரிதான். எனது அண்ணன் கொடுத்த மனுவை 6ம் பிரதிவாதி பதிவு சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு தான்

நிராகரித்துள்ளார் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதியை அவசியமில்லாமல் தரப்பினராக சேர்த்ததால் 6ம் பிரதிவாதியைப் பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/ர.ராஜுவ் காந்தி/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.